வடதலைக்குளம் கிராம மருத்துவமனை.

*வினா எண். 17— திரு. ஏ. ராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி ஒன்றியம், வடதலைக்குளம் கிராமத்தில் மருத்துவமனை துவக்கப்பட்டு செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த மருத்துவமனை மீண்டும் செயல்பட அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) மருந்தகம் திறப்பதற்காக ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆணைகளை புதுப்பித்தும், ஒரு மருத்துவ அலுவலர் பதவியை ஏற்படுத்தியும் மருந்தகத்திற்குத் தேவையான மற்ற பணியாளர்களை நியமிக்க இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணை 1979ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் நாள் அன்று பிறப்பித்துள்ளது.

திரு. ஏ. ராமலிங்கம்: அந்தப் பகுதி மக்கள் மருத்துவ மனையின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அரசு மருத்துவ மனையை செயல் படுத்த நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: மக்களுடைய நலன் கருதித்தான் மருத்துவமனையை நடத்துவதற்கு ஆணை 1979ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மங்கநல்லூர் அரசு மருத்துவமனைக் கட்டடம்

வினா எண். 18— திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குத்தாலம் தொகுதி மங்கநல்லூர் அரசு மருத்துவ மனைக்குச் சொந்த கட்டடம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது கட்டடம் கட்டப்படும் ?